பெற்றிருக்கிருர்கள். ஆகவே, தவறு நடப்பதற்கு வாய்ப்பு, வழி இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

எல்லா வகையிலும் இந்த மான்யம் வரவேற்கத்தக்கது, குறிப்பாக ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டத்தக்க முறையில் அமைந்திருக்கிறது என்று சொல்லி முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. கே. பி. கோபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மான்யக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

முதலாவதாக நெடுங் காலமாக உள்ள ஆசிரியர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றியதற்காக, அதாவது ஹையர் கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு உயர்த்தியதற்கும், அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பதாக உறுதி அளித்ததற்கும் இந்த அரசை நான் பாராட்டாமல் இருந்தால், கடமையிலிருந்து தவறியவனவேன். அதே சமயத்தில் சில குறைகளைச் சுட்டிக் காட்டவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்திருக்கிற அறிக்கையை எடுத்துக் கொண்டாலும், எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடப்பு ஆண்டில் ரூ. 110 கோடி. . .

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்ட முன்வடிவை இம்மாத இறுதிக்குள் சட்டமாக நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனவே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும், மாண்பமிகு அவை முன்னவர் அவர்களையும், மற்றும் கட்சித் தலைவர்களையும் கலந்து கொண்டு, இச்சட்ட முன்வடிவு 22—3—1974, வெள்ளிக்கிழமை யன்று பிற்பகலில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கிறேன்.